


# 26.08.2026 செய்திகள்

## காடு வளர்ப்பில் பற்றாக்குறை

- இந்தியக் காடுகளின் பரப்பை அதிகரிப்பதற்கான பசுமை இந்தியா தேசிய இயக்கத்தின் இலக்கில் கடந்த 10 ஆண்டுகளில் 98% பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக மத்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சிஏஜி) அறிக்கை வெளிவந்தி ருப்பது அதிர்ச்சி
- காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த 2015 டிசம்பர் 12இல் சர்வதேசக் காலநிலை ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை ஏற்கப்பட்டது. இதில் 2030க்குள் 250 முதல் 300 கோடி டன் கார்பன் டை ஆக்சைடுக்கு இணையான கார்பனை உறிஞ்சும் நிலை உருவாக்கப்படும் என இந்தியா உறுதியளித்திருந்தது. இதன்படி மத்திய அரசின் பசுமை இந்தியா இயக்கத்தின் செயல் திட்டத்தின்கீழ் காடுகள், காடுகள் அல்லாத பகுதிகளில் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் நாட்டின் காட்டுப் பகுதியைப் பாதுகாத்தல், மீட்டெடுத்தல், மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்க முடிவெடுக்கப்பட்டது.
- காலநிலை நெருக்கடியைக் கட்டுப்படுத்த, இந்தியா முழுவதும் 2015-16 முதல் 2024-25 வரையிலான 10 ஆண்டுகளில் 14 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் காடுகளை வளர்க்கப் பசுமை இந்தியா இயக்கத்தின்கீழ் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இதுவரை 34 ஆயிரம் ஹெக்டேரில் மட்டுமே காடுகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக சிஏஜி அறிக்கையில் தெரியவந்துள்ளது.
- அதாவது, காடு வளர்ப்பில் 98% பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மறுபுறம், ஏற்கனவே உள்ள காடுகளின் தரத்தை மே ம்படுத்தும் இலக்கும் 92% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.
- இந்தத் திட்டத்துக்கு என ரூ.40,600 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்ட நிலையில், மத்திய அமைச்சரவை ரூ.2,400 கோடிக்கு ஒப்புதல் அளித்தது. அதிலும் கடந்த 10 ஆண்டுகளில் ரூ.1,149,14 கோடி மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளதே, தி ட்டமிட்டபடி செயல்பட முடியாததற்கு முக்கியக் காரணி. இதனிடையே இதுவரை நடைமுறையில் இருந்த 100 நாள் வேலை உறுதித் திட்டம், காடு வளர்ப்பு நிதி மேலாண்மை – திட்டமிடல் ஆணையம் போன்ற பிற திட்டங்களின் மூலம் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க முயன்றபோதிலும், திட்டங்கள் அனைத்தும் தனித்தனித் துறைகளாகவே செயல்பட்டன. மே லும், பல மாநிலங்கள் ஆண்டுத் திட்ட அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிக்கத் தவறியதால் நிலவரத்தைக் கணிக்க முடியாமல் போனது.
- சிஏஜியின் இந்த ஆய்வு 16 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டது. இதில் மத்தியப் பிரதேசம். சத்தீஸ்கரில் மட்டுமே கார்பன் உமிழ்வை உள்வாங்கும் காட்டுப் பரப்பு ஓரளவு தென்படுவதாகத் தெரியவந்துள்ளது. தமிழ்நாட்டின் காட்டுப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான ஆண்டு திட்ட ஒதுக்கீடுகள், அதற்குரிய மத்திய அரசின் ஒப்புதல்கள் சரியான பருவம ழைக் காலத்துக்குள் கிடைக்காமல் கடந்த காலத்தில் தாமதமாகின. இதனால் மரக்கன்றுகள் நடும் பணிகள் பாதிக்கப்பட்டன. மரங்களை நட்ட பிறகு, அவற்றுக்கு முறையாக நீர் பாய்ச்சுதல், களையெடுத்தல் போன்ற பராமரிப்புப் பணிகளுக்கும் உரிய நிதி ஒதுக்கீடு செய்வதில் சிக்கல்களும் எழுந்தன.
- மறுபுறம், காலநிலை நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய காட்டுப் பகுதிகளைக் கண்டறிந்து, மரக்கன்றுகளை நடுவதற்குப் பதிலாக, எளிதில் அணுகக்கூடிய பகுதிகளில்தான் பெரும்பாலும் காடுகளைப் பெருக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

## ஓபிசி க்ரீமி லேயர் தகுதி மீதான மத்திய அரசின் மனு: சிறப்பு அமர்வு

- இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் 'க்ரீமி லேயர்' நடைமுறை பின்பற்றப்படுகிறது. இந்தப் பிரிவினரில் சமுக – பொருளாதார ரீதியில் முன்னேறியவர்களை 'க்ரீமி லேயர்' சொற்றொடர் குறிக்கிறது. அதாவது, குடும்ப ஆண்டு வருமானம் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்கு மேல் (தற்போது ரூ.8 லட்சத்துக்கு மேல்) இருப்பவர்களைக் குறிப்பதாகும். இவர்களுக்கு அரசு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு பலன்கள் கிடைக்காது.
- இதுதொடர்பாக, 2004–ஆம் ஆண்டில் மத்திய அரசு விளக்கம் ஒன்றை வெளியிட்டது. அதில், ஓபிசி பிரிவினரின் பெற்றோர், பொதுத் துறை நிறுவனங்கள், வாங்கிகள், பல்கலைக்கழகங்கள் அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றினால், பெற்றோரின் பணி அரசுப் பணிக்கு இணையானதா என்பது குறித்த அரசு இன்னும் தீர்மானிக்கவில்லை. இது போன்ற சூழ் நிலைகளில் க்ரீமி லேயர் நிலையை வருமான சோதனை மூலம் தீர்மானிக்க வேண்டும்.
- பெற்றோரின் வருமானம் மற்றும் மாற்று வழிகளில் (சம்பளம் மற்றும் விவசாயம் அல்லாத) வருவதை ஆய்வு செய்ய வேண்டும். இதில், அவர்களின் வருவாய் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுக்கு மேல், ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட அளவைத் தாண்டினால், அந்தத் தேர்வர்கள் க்ரீமி லேயர் பிரிவில் வருவார்கள் என்று குறிப்பிடப்பட்டது.
- இதனிடையே, மத்திய பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) நடத்திய குடிமைப் பணிகள் தேர்வில் தகுதி பெற்ற பல ம ாணவர்கள் . ஓபிசி பிரிவினருக்கான க்ரீமி வேயர் அல்லாத பரிலில் இடஒதுக்கீடு கோரினர். ஆனால், மத்திய அரசின் 2004–ஆம் ஆண்டு விளக்கத்தின் அடிப்படையில் பெற்றோர் பொதுத் துறை நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்டவற்றில் பணியாற்றுவதால் இந்தத் தேர்வுகள் க்ரீமி லேயர் பிரிவில் வருவார்கள் என யுபிஎஸ்சி அறிவித்தது.
- இதை எதிர்த்து பல தேர்வர்கள் மத்திய தீர்ப்பாயம், சென்னை, தில்லி, கேரள உயர்நீதிமன்றங்களை நாடினர். இந்த ம னுக்களை விசாரித்த உயர்நீதிமன்றங்கள், தேர்வர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கின. இந்தத் தீர்ப்பு வழங்கின. இந்தத் தீர்ப்புகளை எதிர்த்து மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.
- இந்த மனுவை மார்ச் 11–ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம், ஓபிவி பிரிவினர் க்ரீமி லேயர் பிரிவில் வருகின்றனரா அல்லது இல்லையா என்பதை பெற்றோரின் மாத ஊதியத்தின் அடிப்படையில் மட்டும் தீர்மானிக்க முடியாது. ஓபிசி க்ரீமி லேயர் அறிமுகப்படுத்திய மண்டல் கமிஷன் தொடர்பான இந்திரா சாஹனியின் தீர்ப்பில் எடுத்துரைக்கப்பட்ட அரசமைப்புச் சட்ட நோக்கத்தை தோற்கடிக்கும் விதமாக ஊதிய வருவாயை இயந்திரத்தன மாகக் கணக்கிட முடியாது. தனியார் துறை ஊழியர்களின் குழந்தைகளை இட ஒதுக்கீட்டிலிருந்து நீக்குவதும், அரசு ஊழியர்களின் குழந்தைகளுடன் ஒப்பிடுவதும் பாரபட்சமானது மற்றும் சமத்துவத்துக்கு எதிரானது. எனவே, வருமானத்துடன் பெற்றோரின் பதவி, சமூக அந்தஸ்து ஆகியவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

SURESH

## புதையல் மீது அமர்ந்திருக்கிறோம்!

- நடுக்கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் பயணிகளும், சரக்குகளுமாக 22,000 டன் எடை காணப்பட்டது. அவ்வளவு பெரிய கப்பலில் இந்தியர்களிடம் இருக்கும் தங்க நகைகள் அனைத்தையும் ஏற்றி வைக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.
- 'மோர்கன் ஸ்டான்லி' நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி, இந்தியர்களின் தனிச்சொத்தாக சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தங்கத்தின் அளவு சுமார் 35,000 டன். உலகிலேயே அதிக அளவில் தங்கம் வைத்திருப்பது இந்தியர்கள்தான் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.
- இந்த நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டில், அதாவது 2000–க்கும் 2025–க்கும் இடையே மட்டும் நாம் 507 பில்லியன் டாலர் மதிப்பிலான சுமார் 700 டன் தங்கம் இறக்குமதி செய்திருக்கிறோம். கடத்தி வரப்பட்டது, பயணிகள் அணிந்து வந்தது உள்ளிட்டவற்றையும் சேர்த்தால் நமது இறக்குமதி மேலும் அதிகரிக்கும்.
- நமது நிதி நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு வெளியே குடும்ப சேமிப்புகளாகத் தனியாரிடம் இருக்கும் சுமார் 35,000 டன் தங்கத்தின் சந்தை மதிப்பு 5 டிரில்லியன் டாலரிலும் அதிகம்.
- கடந்த நிதியாண்டில் இந்தியா 72 பில்லியன் டாலர் மதிப்பிலான தங்கத்தை இறக்குமதி செய்தது. நமது தங்கத்துக்கான இறக்குமதி அளவு கடந்த மூன்றாண்டுகளில் இரட்டிப்பாகி இருக்கிறது.




| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |

SURESH' IAS ACADEMY

- கச்சா எண்ணெய்க்கு அடுத்த படியாக, இறக்குமதிகள் மூலம் நமது அந்நியச் செலாவணியின் மீது இறக்குமதிகள் மூலம் நமது அந்நியச் செலாவணியின் மீது அழுத்தம் ஏற்படுத்துவது தங்கம் தான். அதனால்தான் பிரதமரும், நிதியமைச்சரும் தங்கம் வாங்குவதைக் கட்டுப்படுத்தும்படி கோரிக்கை விடுத்தார்கள்.
- தங்கம் என்பது இறக்குமதி செய்யப்பட வேண்டிய அத்தியாவசியப் பொருளல்ல. உற்பத்தி தொடர்பான பயன்பாடு என்று எடுத்துக்கொண்டால் வெறும் 13% மட்டுமே தங்கத்தின் பங்களிப்பு
- 2024 முதல் தங்கத்தின் விலை அதிகரிக்கத் தொடங்கியபோது, பலரும் தங்கத்தில் முதலீடு செய்யத் தலைப்பட்டனர்.
- அதனால் தங்க நாணயங்கள், தங்கக் கட்டிகளுக்கான கேட்பு (டிமாண்ட்) கணிசமாக அதிகரித்து விட்டது.
- அதிகமான கலால் வரி விதிப்பதன் மூலம் ஓரளவுக்குத் தங்கத்தின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த முடியும் என்றாலும், அதையும் மீறி இந்தியாவின் தங்க இறக்குமதி அதிகரித்து வருகிறது.
- ஐக்கிய அரபு அமீரகத்தினுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் 5%-ஆக இருந்த தங்கத்துக்கான இறக்குமதி வரி 14%-ஆக அதிகரித்தது.
- இதனால், தங்கத்தின் இறக்குமதி சற்று குறைந்தது உண்மை. இறக்குமதி வரி 9% அளவில் அதிகரிப்பதன்மூலம் சுமார் 9 பில்லியன் டாலர் வரை அந்நியச் செலாவணி மிச்சப்படலாம்.
- அதேநேரத்தில் தங்கம் கடத்தப்படுவது அதிகரிக்கக்கூடும் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும்.
- இந்தியாவில் உள்ள தங்கத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது சமூக, கலாச்சாரம் தொடர்பானது. திரும ணம், சமயச் சடங்குகள், அட்சய திரிதியை போன்ற தங்கும் வாங்கும் சம்பிரதாய நாள்கள் உள்ளிட்ட காரணிகளுக்காக நகைக் கடைகள் மூலம் ஆபரணத் தங்கம் வாங்கப்படுகிறது.
- 2026 நிதியாண்டில் இதன் தேவை 32%இல் இருந்து 124% வரை காணப்பட்டது. இந்த பயன்பாட்டை நாம் கட்டுப்படுத்த முடியாது, கூடாது.
- அதே நேரத்தில் முதலீட்டுக்காக தங்கத்தை வாங்கி வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். இது ஆபரணத் தங்கத்தைப் போல, உணர்வு தொடர்பானதல்ல.
- தங்கக் கட்டிகள், நாணயங்கள் சார்ந்த இந்த தங்கத்துக்கான தேவை கடந்த நிதியாண்டில் இதன் தேவை 32%-இல் இருந்து 62%-ஆக அதிகரித்தது.
- இந்த நிதியாண்டிலும் இந்தப் போக்கு குறைந்தபாடில்லை. இதைக் கட்டுப்படுத்துவதுதான் இந்திய நிதி நிர்வாகம் எதி ர்கொள்ள இருக்கும் மிகப் பெரிய சவால்.
- மார்ச் 2026 அளவில் இந்தியாவின் முதலீட்டுத் தங்கத்தின் அளவு சுமார் 115 டன்; அவற்றின் மதிப்பு சுமார் ரூ.1.7 டிரில்லியன் அல்லது 18.5 பில்லியன் டாலர்.
- இத்தகைய தங்கம் இறக்குமதி வரி செலுத்தி, காப்பீடு செய்யப்பட்டு, பாதுகாப்பதற்குக் கட்டணம் செலுத்தப்பட்டு பெட்டகங்களில் முடங்கிக் கிடக்கிறது.
- நம்மிடம் இருக்கும் தங்கத்தை உலகச் சந்தையில் விற்க முற்பட்டால், நமது அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை முற்றிலுமாக அகன்றுவிடும்.
- கடந்த நான்கு ஆண்டுகளில் உலகின் பல்வேறு நாடுகளுடைய மத்திய வங்கிகள் சுமார் 3,500 டன் தங்கத்தை வாங்கி இருக்கின்றன.
- இந்தியாவிடம் எந்தவிதப் பயன்பாடும் இல்லாமல் முடங்கிக் கிடக்கும் 35,000 டன் தங்கத்தில் வெறும் 10% தங்கத்தை நாம் டாலராக்க முற்பட்டாலே போதும், நமது நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அகன்றுவிடும்.

## உயிர் காக்கும் நடைபாதைகளை யார் காப்பது?

» நடைப்பயணம் ஓர் அடிப்படை உரிமை

- நடைபாதை என்பது நகராட்சி விருப்பத்துக்குரிய வசதி அல்ல ; அரசமைப்புச் சட்டம் உறுதிப்படுத்திய மக்களின் அடிப்படை உரிமை என்பதை உச்சநீதிமன்றம் அண்மையில் வழங்கிய முக்கியமான தீர்ப்பு வலியுறுத்தியுள்ளது.

- பாதுகாப்பான நடைபாதை, பாதசாரிகளின் உயிருடன் நேரடியாகத் தொடர்புடையது என்று நீதிமன்றம் கூறியுள்ளது.
- மாநில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளும் நடைபாதைகளை உருவாக்கிப் பராமரிப்பதற்கான தெளிவான கொள்கைகளை வகுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.
- காரணம், நடக்க முடியாத நகரம் நோய்களை உருவாக்குகிறது. இந்தியா இப்போது வேகமாக நகரமயமாகிவரும் நாடு. ஆனால் அதே வேகத்தில் மக்களுக்கு உடல் உழைப்பு குறைந்து வருகிறது.
- சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், கொழுப்புக் கல்லீரல் நோய் போன்ற வாழ்க்கைமுறை நோய்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்த நோய்களைத் தடுப்பதற்கான மிக எளிய, மிகக் குறைந்த செலவுடைய மருந்து நடைப்பயிற்சி ஒன்றுதான்.
- ஆனால், உலகச் சுகாதார அமைப்பின் இந்திய உடல் இயக்கத் தரவுகள் கவலைக்குரிய உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.
- இந்தியாவில் வயது வந்தோரில் கிட்டத்தட்ட பாதிபேர் பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு உடற்பயிற்சி செய்வதில்லை. பெண்களிடம் இந்த நிலை இன்னும் மோசமாக உள்ளது.
- 11 முதல் 17 வயது வரையிலான குழந்தைகள், இளம்பருவத்தினரிடமும் உடல் இயக்கக் குறைபாடு அதிகமாகவே காணப்படுகிறது. இதற்குக் காரணம் மக்களின் சோம்பேறித்தனம் மட்டுமல்ல. அவர்கள் நடப்பதற்கு ஏற்ற சூழலை நகரங்கள் வழங்கவில்லை என்பதும்தான்.
- நடைபாதை என்பது வெறும் சிமெண்ட் தளம் அல்ல; உயிர்காக்கும் மருந்து. அது நகரத்தின் தடுப்பு மருத்துவம். அமன்றாட நடைப்பயிற்சி ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- இன்சுலின் செயல்திறனை மேம்படுத்துகிறது, உடல் எடையைக் குறைக்கிறது. நல்ல தூக்கத்தையும் மூட்டு ஆரோக்கியத்தையும் வழங்குகிறது. இதைவிட மலிவான, ஒரே நேரத்தில் அதிகம் பேருக்குப் பலன் தரக்கூடிய தடுப்பு மருந்து வேறில்லை.

» திட்டமிட்ட நகரமைப்பு தேவை

- நகரங்களில் பாதுகாப்பான, தொடர்ச்சியான, நிழலுடன் கூடிய நடைபாதைகள் இருந்தால், பலர் தேவையில்லாமல் கார்களையும் இருசக்கர வாகனங்களையும் பயன்படுத்துவதைத் தவிர்ப்பார்கள்.
- ஆனால், இந்தியாவில் நடைபாதை ஆக்கிரமிப்புகள்தான் பாதசாரிகளை அதிகம் அச்சுறுத்துகின்றன. ஆகவே, அவ்வப்போது நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது மட்டும் தீர்வாகாது.
- சில நாள்களில் மீண்டும் அதே நிலை திரும்பிவிடும். அதேபோல் தெருவோர வியாபாரிகளை எதிரியாகக் கருதுவதும் சரியல்ல. அவர்களுக்கும் வாழ்வாதார உரிமை உண்டு.
- எனவே, நகரங்களை அறிவியல் அடிப்படையில் திட்டமிட வேண்டும். நடப்போருக்குத் தனிநடைபாதை, வியாபாரிகளுக்குத் தனி இடம், வாகனங்களுக்கு ஒழுங்கான நிறுத்துமிடங்கள், மின்சாரம், குடிநீர், தொலைத்தொடர்பு போன்ற சேவைகளுக்கான பயன்பாட்டுப் பாதைகள் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துத் திட்டமிட வேண்டும். அதற்குப் பிறகும் நடைபாதையை ஆக்கிரமிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளும் அவசியம்.

» நகரத்தின் நாகரிகம்

- ஒரு நகர வளர்ச்சியின் அளவுகோல் அந்த நகரத்தில், எத்தனை மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதில் இல்லை. அங்கே குழந்தை முதல் முதியவர் வரை யாரும் அச்சமின்றி நடந்து செல்ல முடியுமா என்பதுதான் உண்மையான அளவுகோல்; அதற்கு எத்தனை கிலோமீட்டர் பாதுகாப்பான நடைபாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதே முன்னேற்றத்தின் அளவுகோலாக இருக்க வேண்டும்.
- பாதுகாப்பான நடைபாதை என்பது வெறும் சிமெண்ட் கட்டுமானம் அல்ல ; அது பொதுச் சுகாதாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு, சாலைப் பாதுகாப்புக்கான உத்தரவாதம், சமூக நீதியின் அடையாளம். மனிதர்களுக்காக நகரங்களை மீட்டெடுக்க வேண்டுமானால், முதலில் நடைபாதைகளை மீட்டெடுக்க வேண்டும்.
- இனிமேல் அமைக்கப்படும் ஒவ்வொரு சாலையில் தொடர் நடைபாதை, போதிய அகலம், நிழல் தரும் மரங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான சரிவுப் பாதைகள், பாதுகாப்பாகச் சாலையைக் கடக்கும் வசதி, பேருந்து நிறுத்தங்களின் அருகே தடையற்ற நடைவழிகள் ஆகியவை கட்டாய அம்சங்களாக இருக்க வேண்டும்.

SURESH' IAS ACADEMY

- இரண்டு பேர் எதிரெதிரே நடக்கவும், சக்கர நாற்காலியில் செல்லவும் போதிய அகலத்தில் நடைபாதைகள் அமைக்கப்பட வேண்டும்.
- நடைபாதை சாலை வடிவமைப்பில் பள்ளிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், மெட்ரோ நிலையங்கள் போன்ற மக்கள் அதிகமாக நடந்து செல்லும் பகுதிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
- மர நிழல், அமர்வதற்கான இருக்கைகள், பொதுக் கழிப்பறைகள், போதிய தெருவிளக்குகள் ஆகியவை ஆடம்பர வசதிகள் அல்ல ; பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் பாதுகாப்பாக நடந்து செல்ல வேண்டிய அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள்.

» நடைப்பயணம் ஒரு தேசியக் கொள்கை

- நகர வளர்ச்சி, போக்குவரத்து, பொதுச் சுகாதாரம், கல்வி ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் தேசிய அளவிலான செயல்திறன் மிக்க நகரப் பயணக் கொள்கை இந்தியாவுக்குத் தேவை.
- ஒவ்வொரு மாநகராட்சி, நகராட்சியும் தங்கள் பகுதிகளில் உள்ள நடைபாதைகளின் வரைபடத்தை வெளியிட வேண்டும். ஆண்டுதோறும் ஆக்கிரமிப்பில்லாத நடைபாதைகள் குறித்துத் தணிக்கை நடத்தி, அதன் அறிக்கையையும் மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.

SURESH'